ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2455/13 - 2025 සැප්තැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2025.09.23
*2455/13 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு

### 02 ஆவது திருத்தம்

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2020, யூலை மாதம் 01 ஆந் திகதிய மற்றும் 2182/36 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

**டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,**
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

2025, செத்தெம்பர் 18.

1A - G 45430 — 05 (2025/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

<u>பகுதி I</u>

திருத்த இலக்கம் 01 – 2022, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய மற்றும் 2300/09 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

<u>பகுதி II</u>

7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை :

| *பாடங்கள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|
| பிரயோக கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம், நவீன கல்விப் பிரயோகம் தொடர்பான சம்பவக் கற்கை | 100 | 40 |

7.2.4.4 தகைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சை:

| *புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்குப் பரிசீலிக்கப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| <u>பகுதி I</u> | | |
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 10 | ஏற்புடையதன்று |
| 2. ஆங்கில மொழி தேர்ச்சி | 05 | |
| 3. தகவல் தொடர்பாடல் திறன் | 05 | |
| <u>பகுதி II செயன்முறைப் பரீட்சை</u> | | |
| 1. செயன்முறை கற்பிக்கும் திறன் கற்றல்/ கற்பித்தல் முறைமை | 130 | 75 |

“அ” பின்னிணைப்பின் தொடரிலக்கம் 01, 02.1, 02.2 மற்றும் 05 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் பதிலாகப் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

01. எழுத்துமூலப் பரீட்சை :

| *பாடங்கள்* | *காலம்* | *புள்ளி* |
|---|---|---|
| பிரயோக கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம் மற்றும் நவீன கல்வி பிரயோகங்களுடன் தொடர்புடைய சம்பவக் கற்கை | 03 மணித்தியாலங்கள் | 100 |

02. பாடத்திட்டம் :

02.1 பிரயோகக் கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம் மற்றும் நவீன கல்விப் பிரயோகம் தொடர்பிலான சம்பவக் கற்கை (காலம் - 03 மணித்தியாலங்கள்)

கோட்பாட்டு ரீதியான அறிவு மட்டும் இன்றி கல்வி ஆலோசகராக செயல்முறை அனுபவத்துடனான தமது ஆக்கப்பூர்வமான திறன், கல்விப் பாடத்திட்டத்துக்கு சமாந்தரமாக மற்றும் சாயலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழ்க் காணும் துறைகளுடன் தொடர்புடைய சுருக்க வினாக்களுக்கு சம்பவக் கற்கைகள் முன்வைக்கப்படும்.

I. கல்வி உளவியலுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள்

II. முகாமைத்துவ எண்ணக்கருக்களை இனங்காணல் மற்றும் கல்வி முகாமைத்துவ ஐவகை செயற்பாடுகள்

III. கற்றல், கற்பித்தல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை செயற்பாடு, மேற்படி செயற்பாட்டின் ஆசிரியரின் வகிபாகம் மற்றும் சகலருக்கும் கல்வி எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவம்

IV. விசேட தேவையுடைய மாணவர்கள் மற்றும் வகுப்பறையில் பிரயோக வகுப்புக்கள் மற்றும் வகுப்பறை பிரச்சினைகளைத் தீர்த்தல்
உ-ம் : வகுப்பறை முகாமைத்துவம், குறைந்த வளங்கள் மூலம் கூடிய விளைதிறனை பெற்றுக்கொள்ளும் முறை

V. இணைப்பாட விதான செயற்பாடுகள் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்

VI. ஆசிரியர் திறன் மதிப்பீட்டு முறைமை

VII. மேற்பார்வை கோட்பாடுகள், மேற்பார்வை செய்யும் முறைமை, எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள்

VIII. பாடசாலைப் பாடத்திட்டத்தின் தன்மை, பாடத்திட்டத்தின் ஊடாகப் பாடசாலையை தொடர்புபடுத்தக்கூடிய விதம் மற்றும் தொழில் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதம்

IX. பல்வேறுபட்ட கல்வி ஆய்வுக்கான பிரவேசம், தகவல் சேகரிப்பு முறைமை மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

02.2 **முழுவதுமாக நீக்கப்படுகிறது.**

05. தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் போது நடாத்தப்படும் செயல்முறைக் கற்பித்தல் திறன் (கற்றல்/ கற்பித்தல் மற்றும் நுட்பங்கள்) பரிசீலிப்பதற்காக நடாத்தப்படும் செயல்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்.

| *புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய நியதிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்கான குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 1. முறையான ஆரம்ப தயார்நிலைக் குறிப்பு | 20 | 75 |
| 2. முன்வைப்பு | | |
| 2.1 பிரவேசம் | 20 | |
| 2.2 பாட உள்ளடக்கம் (தலைப்புடன் தொடர்புடையது) | 20 | |
| 2.3 பாட அபிவிருத்தி | 20 | |
| 2.4 உபகரண பயன்பாடு | 20 | |
| 2.5 நேர முகாமைத்துவம் | 20 | |
| 2.6 ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு (முன்வைப்புத் திறன்) | 10 | |

EOG 09-0216

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.